சொந்தத் தொழில்



ஆர். தயாநிதி.

சொந்தத் தொழில்

எழுதியவர் :
திரு. R. தயாநிதி,
(ஆசிரியர் : "உலகம்")
திருச்சிராப்பள்ளி.

★

அணிந்துரை :
திரு. B. கோபாலன். B. A., M. Com.
தொழில்துறை முதன்மை விரிவுரையாளர்,
அர்ச். சூசையப்பர் கல்லூரி, திருச்சி.

கஸ்தூரி பதிப்பகம்,
உறையூர், திருச்சிராப்பள்ளி.

சொந்தத் தொழில்.

உரிமை ஆசிரியருக்கே

விலை ரூ. 1—8—0.

Printed at Kasturi Press, Woriur, Tiruchirapalli. (Phone : 442).
Published by Kasturi Pathipagam, Woriur, Tiruchirapalli.

அணிந்துரை.

கடந்த மாபெரும் யுத்தத்தின் சின்னங்களாகிய வேலையில்லாத் திண்டாட்டம், பற்றுக்குறை போன்ற இன்னல்கள் தலைவிரித்தாடும் தற்சமயம் ஒவ்வொரு தனி நபரும் தம் அன்றாடத் தேவையைத் திருப்தி செய்துகொள்ளுவதற்குப் பல வழிகளிலும் முயன்று வருகின்றார். அது போலவே நாட்டு சர்க்காரும் மக்களின் நலனுக்காக இக் குறைகளை நீக்கப் பாடுபட்டு வருகிறது. அரசாங்கத்தார் இதற்காகத் திட்டங்கள் வகுத்தும் வருகின்றார்கள். நாட்டின் சீரும் சிறப்பும் மக்களின் சுபீட்சத்தை அனுசரித்து இருப்பதால் எந்த வழியில் பிரவேசித்தால் தங்கள் கொள்கை நிறைவேறும் என்று சிந்தித்தும் வருகின்றார்கள்.

இச் சந்தர்ப்பத்தில் "சொந்தத் தொழில்" எனும் புத்தகத்தை யான் காண நேர்ந்தது. சமயத்திற்கும் சூழ்நிலைக்கும் தகுந்த யோசனைகளை மிகவும் எளிய நடையில், யாவரும் அறிந்துகொள்ளக்கூடிய நடையில், ஆசிரியர் அமைத்திருப்பது மிகவும் போற்றத் தகுந்ததே.

சொந்தத் தொழில் செய்வதால் ஒரு தனிப்பட்ட நபரின் நிலையும் கௌரவமும் உயரும் என்ற உண்மைத் தத்துவத்தை அழகான முறையில் தகுந்த கோட்பாடுகளின் மூலம் ஆசிரியர் தந்திருக்கிறார். மேலும் ஒரு நாட்டின் செல்வ நிலைக்கும், பொருளாதார நிலைக்கும் நாட்டின் சொந்தத் தொழில் அனுகூலமாயிருக்கும் என்பதையும் அறிவுறுத்தியிருக்கிறார். 'தொழில் வெற்றியின் ரகசியங்கள்' என்ற அத்தியாயத்தில் வெற்றியின் நுட்பங்களை வெகு சாமர்த்தியமாகவும், யாவருக்கும் மனதில் பதியும்படியான தனி பாணியிலும் எடுத்துரைத்திருக்கிறார். 'தொழிலும் அதிர்ஷ்டமும்' என்ற அத்தியாயத்தில் "Opportunity knocks at the door of everybody who seeks it" என்ற பொருள்படும்படி அறிவுறுத்தியிருக்கிறார்.

குடிசைத் தொழிலின் அபிவிருத்திக்காகப் பாடுபடுவது நம் நோக்கமாக இருக்கவேண்டும். மகாத்மா காந்தியடிகளின் எண்ணங்களை நடைமுறையில் காட்டும்படி ஆசிரியர் அறிவுறுத்தியுள்ளார். உதாரண மாகக் கொடுத்துள்ள சிறு கைத் தொழில்களின் குறிப்புகள் பலருக்கு நடைமுறையில் பயன்படும் முறையில் அமைந்துள்ளன.

ஆசிரியர் தீர்க்கதிருஷ்டியுடன் கொடுத்துள்ள முறைகளைக் கையாண்டால் ஒவ்வொருவரும் பெரும் நலனுடன் வாழ முடியும் என்பதை நாமும் வலியுறுத்துகிறோம். நம் சுதந்திர இந்தியாவின் சுபிட்ச வாழ்க்கைக்கு ஒவ்வொருவரும் முயல்வோம்.

TIRUCHIRAPALLI
17—2—1954.

B. GOPALAN,
Chief Lecturer in Commerce,
St. Joseph's College, Trichy.

முன்னுரை.

கடந்த சில நூற்ருண்டுகளாக நமது சமூகம் தவிர்க்க முடியாத பல்வேறு காரணங்களால் ஓர் அளவுக்கு ஊக்கமிழந்து நமது கலாச்சாரத்தையும், நாகரீகத்தையும் மறந்து வாழ்வில் உற்சாகமில்லாமல் வாழ்ந்துவிட்டது. அக்காலத்தில் காட்டு மிராண்டிகளாகவும் நமது நாகரீகத்திற்குப் பல நூற்ருண்டுகள் பிற்பட்டும் இருந்த பலநாட்டினர், குறிப்பாக மேற்கத்திய நாட்டினர் புது பலத்துடன், உணர்ச்சி, ஊக்கத்துடன் முன்னணியில் சென்று இன்று நமக்கே வழிகாட்டவும் முனேந்துள்ளனர். நாமோ அதற்கு நேர்மாருக, தேசீய ஆஸ்திகள் சுரண்டப்பட்டு எங்கு திரும்பினும் அந்தகாரம் சூழ்ந்த நிலையில் நின்ருேம், சுதந்திரம் பெற்றும் அதன் பலனைக் காண முடியாத நிலையில் இருக்கிறது நம் நாடு.

ஆனல் இதற்கிடையில் நம்முடைய சுதந்திரப் போராட்ட காலமும் சுதந்திர உணர்ச்சியும் நமக்கு விழிப்பூட்டி நம்மை ஆர்ப் பரித்து விழித்தெழச் செய்துவிட்டன. நாம் பெற்ற சுதந்திரம் நிலைக்க, நம் கலாச்சாரம் வாழ, நாட்டின் நலனைப் பெருக்கத் திட்ட மிட்டு அரும்பாடுபடுகின்றனர் நம் தலைவர்கள்.

இந்த நிலையைச் சீர்திருத்துவதிலும் வாழ்க்கை ஆனந்த மடையச் செய்வதிலும் தலைவர்களோடு நில்லாது நமக்கும் கடமை அதிகமாக உள்ளது. இது தவிர்க்க முடியாத, தப்ப முடியாத பெரும் கடமை என்பது எவராலும் மறுக்க முடியாதது. நம்முடைய சந்ததிகள் நம்முடைய அனுபவங்களைப் பெருமல் உயர்ந்த நிலையில் இருக்கச் செய்வது நம்முடைய பொறுப்பு. நாட்டின் சுபீட்சமே நமது சுபீட்சம். இம்மாதிரி நாடும், அதனல் நாமும், நம்மவர்களும் சுபீட்ச மடைய நம் தேசீய செல்வம் பெருக வேண்டும். இதற்கு உற்பத்தி பெருகவேண்டும். உற்பத்திப் பெருக்கத்தைத் தொழில் வளம் ஒன்றே செய்யமுடியும்.

தொழில் அபிவிருத்திக்குள் சுபீட்சம் புதைந்திருக்கிறது. அதைப் பொறுத்து வேலையில்லாத் திண்டாட்டம் நீங்க வழி ஏற்படு கிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்தால் பிறகு எல்லாப் பிரச்சினைகளுக்கும் பரிகாரம் தேடுவது மிக மிகச்சுலபம். எவ்வளவுக் கெவ்வளவு மக்கள் தொழில் துறையில் ஈடுபடுகின்றனரோ அவ்வள வுக்கவ்வளவு அதிகமாக வேலை கிடைத்து வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிகிறது. இதில் அரசினரின் பொறுப்பைவிடத் தற்காலச் சூழ்நிலையில் மக்களின் பொறுப்பே அதிகம். ஆகவே முடிந்த ஒவ்வொருவரும் தொழில் துறையில் ஈடுபடவேண்டும். உற்பத்தியைப் பெருக்கி, தேசீய செல்வத்தை வளர்த்துத் தங்க ளுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழித்து அத்துடன் தம்மைச் சார்ந்தவர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஓரளவுக்கு நீக்கிச் சுதந்திர புருஷர்களாய் வாழவேண்டும்.

இதற்கு உதவத் தமிழ் மொழியில் அதிகமாகப் புத்தகங்கள் இல்லை. இக்குறையை நீக்குவது, வேலையில்லாதவர்களுக்கு ஒருவிதத் தொழில் விருப்பம் உண்டாக்கி அவர்களைத் தொழில் துறையில் ஈடுபடுத்திப் பலனடையச் செய்தல், தொழில் துறையில் ஈடுபட விரும்புவோர்க்கும், அதில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் அதை எப்படிச் செவ்வனே செய்வது என்பதை விளக்குவது இவைகளே இப் புத்தகம் எழுதப்பட்டதின் நோக்கங்கள். இதைப் படிக்கும் பலரில் ஒருவராவது தொழில் துறையில் இறங்கிப் பலன் அடைவார் களானால் இந்த நோக்கம் நிறைவேறியதாகக் கருதிப் பரவச மடைவேன்.

இதைக் கண்ணுறும் அன்பர்களுக்குத் தோன்றும் மாறுதல் களையும், அபிப்பிராயங்களையும் தெரிவித்து இந்நூலை இன்னும் அதிகப் பலனுள்ளதாகச் செய்ய உதவுமாறு வேண்டுகிறேன்.

— ஆக்கியோன்.

சமர்ப்பணம்.

சுதந்திர நவ இந்தியாவின் சிற்பிகளுக்கும், நமது தமிழ் நாடு அதன் கலாச்சாரங்களுக்கேற்பப் பழைய கேந்திர நிலையை அடையப் பாடுபடும் மகா சக்திகளுக்கும் பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

பொருளடக்கம்

				பக்கம்
என்ன செய்வது?	...	....	....	1
வேலையும் தொழிலும்...		....	....	5
நாடும் தொழிலும்	....	...	...	11
வேலையும் அரசாங்கமும்		...	...	17
என்னால் தொழில் செய்ய முடியுமா?			...	22
தொழிலும் விவேகமும்		...	....	26
தொழிலும் ஊக்கமும்		...	...	29
தொழிலும் முயற்சியும்		...	...	33
தொழிலும் தன்னம்பிக்கையும்		...	...	35
பலவிதமான தொழில்கள்		...	....	40
எந்தத் தொழிலைச் செய்வது?		...	...	50
தொழில் வெற்றியின் ரகசியங்கள்...			...	56
தொழிலும் அதிர்ஷ்டமும்		...	...	66
தொழிலில் திட சித்தம்		...	....	74
தொழிலில் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்கள்				80
அனுபந்தம்: சிறு தொழில்கள்		...	...	87
தேனீ வளர்த்தல்	...	...	...	91
மால்ட் ஆகாரங்கள்	...	...	...	93
கோழிப் பண்ணை	....	...	...	95
கயிறு ...	...	...	...	97
பிஸ்கட் & ரொட்டி ...		...	...	100
சோப்பு ...	...	...	...	102
கூடைகள், பிரம்பு மூங்கில் பொருள்கள்			...	104
மை ...	...	...	...	106
ஆயத்தப் பொருள்கள்		...	...	108
பால் பண்ணை	...	...	...	110
வாசனைத் திரவியங்கள்		...	...	112

"சொந்தத் தொழில்"

என்ன செய்வது?

பள்ளிக்கூட வாழ்க்கை முடிந்து விட்டது. ஆனந்த மாய்க் கவலை இல்லாமல் படிப்பதைத் தவிர வேறு விதமான பொறுப்புகள் இல்லாத வாழ்க்கை முடிந்து விட்டது. நம் உண்மையான வாழ்க்கையின் முதல் திருப் பத்திற்கு வந்துவிட்டோம். அதாவது, பொறுப்புகளை ஏற்று போராட்டமான வாழ்க்கையை மேற்கொள்ளும் கட்டம் ஆரம்பமாகிவிட்டது. எதிரே இருக்கும் வாழ்க் கையின் திரும்பிய பாதையில் ஜீவனோபாயத்தைத் தேடும் நிலை. நம்மில் கிட்டத்தட்ட ஒவ்வொரு வாலிப னையும் எதிர்நோக்கி நிற்கும் காலம் இந்தக் கட்டம். வேலை ஒன்றைத் தேடி அமர வேண்டியது என்பது தான் அடுத்த யோசனை. வேலை கிடைத்தால் போக வேண்டியது தான். எந்த வேலைக்குப் போவது? என்பது இவ்விடத்தில் ஒரு பிரச்சனை. எங்கே அந்த வேலை கிடைக்கும்? அந்த வேலைக்கு இருக்கும் போட்டியில் நமக்கு அது கிடைக்குமா? முடிவு கிட்டத்தட்ட "சிரமசாத்யம்" என்பதுதான்.

"எந்தவேலையும் காலியில்லை" எங்குச் சென்றாலும் இந்தப்பதில் தான், தேவைக்குமேல் ஆள் இருப்பதாகக்

கூடச் சில இடங்களில் சொல்லுவார்கள். ஒரு சிலவேலை கள் காலியிருந்தாலும் அவைகளுக்குச் சமாளிக்க முடி யாத போட்டி. உள்வயணத்தில் பெரிய இடத்துச் சிபார் சுகள், சொல்லமுடியாத சலுகைகள். இந்த நிலையில் நமக்கு எப்படித்தான் ஒரு வேலை கிடைக்கும்? மீறி விடா முயற்சி செய்தாலும் ஒரே எமாற்றம்! திகைப்பு!!

இதற்கு மூலகாரணம் என்ன? நமக்கு அளிக்கப்பட் டகல்வியும் நம்மிடம் வளர்க்கப்பட்டிருக்கும் மனப்பான் மையுமே. பெரும்பான்மையான யுவர்கள், யுவதிகள் கூட, ஏன் படித்தார்கள்? பகீரதப் பிரயத்தனப்பட்டு சர்டிபிகேட் ஏன் வாங்கினுர்கள்? படிப்பு, பாஸ் செய்து முடிந்ததும் ஏதோ ஒரு வேலைக்குச் செல்லத் தங்களைத் தயார் செய்து கொள்ளத் தானே? பள்ளியில் படிக்கும் நாட்களில் வேலைக்குப் போவதைப்பற்றி என்னென்ன இன்பக்கனவுகள் கண்டிருப்பார்கள்! தன்னுடைய பிற் காலத்தைப் பற்றி என்னென்ன நினைத்திருப்பார்கள்! அதற்குப்பின் பள்ளியை விட்டதும் வேலை தேடுவதில் என்ன உற்சாகமாய் முனைந்திருப்பார்கள்! முடிவு "ஒரு வேலையும் கிடைக்கவில்லை." ஒரே அதிர்ச்சி - நிராசை. வாழ்க்கையில் உற்சாகம் குன்றி விடுகிறது. நம்பிக்கை யையும் இழந்து விடுபவர்களும் உண்டு.

அப்படி இல்லாமல் எப்படியோ ஒரு வேலைக் கிடைத்து விட்டாலும் அதில் சட்டதிட்டங்கள், கட்டுப் பாடுகள் ஏராளம். காரியாலயத்தில் சிப்பந்திகளுள் சூழ்ச்சிகள்; விருப்பு, வெறுப்புகள், குட்டிக்கலகங்கள் இவைகளுக் கெல்லாம் உட்பட்டு வேலைசெய்தாக வேண் டும். அப்படியே இருந்து வேலைசெய்தாலும் கிடைக்கும்

ஊதியம் மிகக்குறைவு. வாழ்க்கையின் அத்தியாவசிய தேவைகளைக்கூட சமாளிக்கப் பற்றாக்குறையானது. இதுவே இன்றைய நிலை. ஏற்கனவே இந்தக் கட்டங்களை யும் தாண்டி ஏதோ ஒரு வேலையில் இருப்பவர்கள் நிலையும் கிட்டத்தட்ட இதே தான்.

வாயும் நிறையாமல், வயிறும் நிறையாமல் இந்தச் சங்கடத்தை விட்டுச் சுயமரியாதையுடன் ஜீவனோபாயத் திற்குச் **சொந்தத் தொழில்** ஒன்று செய்தால் என்ன? இது ஒரு மேம்பாடான உணர்ச்சிதான். முண்டி அடித்து வேலைக்குப் போட்டியிடுவதிலும் எப்படியோ ஒருவேலை கிடைத்து விட்டால் கிடைக்கும் வேலையைக் காப்பாற் றிக் கொள்வதிலும் கையாளும் பிரயாசைகளைச் சொந்த மாக ஒரு தொழிலில் ஈடுபடுத்திப் பார்க்கலாமே என்று நினைப்பது இயற்கை. இவ்வித நினைப்பு உண்டாவது போற்றத்தக்கதே.

எண்ணம் போற்றதக்கது. வேலையில்லாத் திண்டா டத்தையும், பற்றாக்குறையையும் போக்குவதற்கான வழியும் கூட. ஆனால் என்ன தொழில் செய்வது? அதை எப்படிச் செய்வது? நாம் காரிய சாத்தியமாக தொழில் செய்யமுடியுமா? என்ற கேள்விகளும் தொடர்ந்து எழு கின்றன. இக்கேள்விகளுக்குப் பதில் **தொழில் செய்வது உங்களுக்குக் காரிய சாத்தியமானதே. உங்களால் தொழில் செய்யமுடியும்.**

நம் அறிவுக்கும் ஆற்றலுக்கும் சூழ்நிலைக்கும் ஒட்டிய தொழிலாக இருக்கவேண்டும். முதலில் உகந்த தொழிலைப் பொறுக்கி எடுக்க வேண்டும். உத்தேசித்தத்

தொழிலின் நுணுக்கங்களை ஆராய்ந்து அறிந்து தெளிதல் வேண்டும். பிறகு அதில் முழுமனதுடன் முயற்சித்தால் எந்த ஒரு தொழிலையும் வெற்றிகரமாக நடத்தலாம். சொந்தத் தொழிலில் சுயமரியாதையுடன் சுயேச்சையாக வாழ்க்கையை நடத்தலாம்.

உலகில் "நம் இடம்"

ஒரு அளவிற்கு

உலகத்தில் நம்முடைய நிலை நமக்கு முன்பே உண்டாக்கப்பட்டிருக்கிறது.

ஒரு மிக சிறிதளவு

உலகில் நம்முடைய நிலையை பிறர் தீர்மானிக்கின்றனர். பிறர் கையில் உள்ளது.

ஒரு சிறிதளவு

நம்மைச் சுற்றிலுமுள்ள சூழ் நிலை உலகில் நம்முடைய நிலையை இயக்குகின்றன.

சில சமயங்களில்

குருட்டு அதிர்ஷ்டம் நம் நிலையை ஓரளவுக்கு நிச்சயிக்கிறது.

ஆனால் கிட்டத்தட்ட முழுவதும்

நிலை எதுவாக இருப்பினும் உலகில் நம்முடைய இடத்தை நாமே நிர்ணயித்துக் கொள்ளுகிறோம்—தேடிக்கொள்ளுகிறோம்.

"என்னவர்"

வேலையும் தொழிலும்

பிறரிடம் வேலைத்தேடி ஜீவனம்செய்யும் மனப்பான்மை சுபீட்சத்திற்கு ஏற்றதல்ல. இவ்வாறு வாழவிரும்புவோருடைய வாழ்க்கைத் தரமும் கேவலம் வயிற்றைக் கழுவிக் கொள்ளும் வகையில் இருக்குமேயன்றி சுபீட்சமாக இருக்கும் என்பது சந்தேகமான விஷயம். இம்மனப்பான்மையுடையோர் போகும் பாதை சிறிது சிறிதாகச் சிந்தனை சக்தியை இழக்கச்செய்து கம்பீரமற்ற, பெருமையற்ற வாழ்க்கையை வாழச்செய்து பொறுப்புணர்ச்சியையும் இழக்கச் செய்கிறது. வேலையில் தானாகவே ஒரு பிரியத்தையும், ஆர்வத்தையும் ஏற்படுத்தாது கடனுக்கு வேலைசெய்யும் மனப்பான்மையை வளர்க்கிறது. இது சமூக வளர்ச்சிக்கும் நலனுக்கும் முதல் விரோதி.

சுயமாகத் தொழில்செய்ய விரும்புவோர் ஒவ்வொருவரும் தாம்இப்படிச் சொந்தமாகத் தொழில் செய்வதால் ஒரு அரசாங்க உத்தியோகத்தின் பெருமைவருமா? ரயில் அல்லது தபால் இலாக்காவில் கிடைக்கும் சம்பளம் கிடைக்குமா? ஒரு ராஜ்ய சர்க்கார் உத்தியோகத்தில் சம்பாதிக்கக்கூடிய மேல்வரும்படி சம்பாதிக்க முடியுமா? ஒரு பெரிய தொழிற்சாலையிலோ, அல்லது வணிகத்துறையிலோ வேலை செய்வதினால் ஜீவனோபாயத்திற்குக் கிடைக்கும் பாதுகாப்பு கிடைக்குமா? என்றெல்லாம் யோசிப்பது சகஜம். ஆனால் இந்த எண்ணங்களுக்கு

நடுவே, "எனக்காக, என் சொந்தத் தொழிலுக்காக உழைப்பதினால் நான் உயர்ந்தவனாகிறேனா? என் நிஜ வாழ்க்கை நிலை உயருமா? எனக்கு முன்னேற்றம் ஏற்படுமா? அறிவு வளருமா? நான் பிறருக்காக, இடப்படும் வேலைசெய்து, கொடுக்கப்படும் கூலியைப் பெறுவதினால் நான் நிஜமனிதன் ஆகிறேனா என்பதையும் சிந்திக்க வேண்டும்.

வேலைக்குச் செல்லும் ஒவ்வொருவரும் அந்த வேலையில் ஒரு ஆர்வம் இருப்பதைவிட அதைச் செய்வதால் அவர்கள் ஜீவனோபாயத்திற்குக் கிடைக்கும் பணத்தின் மேல் அதிக அக்கறை காட்டுவது சகஜம். இதை உத்தேசித்தே அவர்கள் அவ்வப்போது தங்களுக்கு இட்ட வேலையைச் செய்துவிட்டு கையைக் கழுவிக்கொண்டு போக வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகிறதே ஒழிய செய்யும் தொழிலில் ஆர்வம் ஏற்படுவதில்லை. மேலே இருப்பவர்களின் கெடுபிடிக்கு அஞ்சி வேலை செய்யும் நிலை ஏற்படுகிறதே யொழிய மனமுவந்து வேலை செய்வதில்லை, காலத்தைக் கணக்கிட்டு, சரி, சம்பளம் கணக்காகிவிட்டது என்பதே அவர்கள் போக்கு. சுருங்கச் சொல்லின் கூலிக்கு மாரடிப்பதே அவர்கள் நடைமுறை. இதன் விளைவு பொறுப்புணர்ச்சி படிப்படியாகக் குறைந்து ஜீவனற்ற இயந்திர மனப்பான்மையை ஏற்படுத்துகிறது. இதுவே நம்நாட்டின் பரிதாபகரமான தொழில் நிலைக்குக் காரணம். இந்நிலையை நாட்டின் நன்மையைக் கருதும் எவரும் நீடிக்கச் செய்யக் கூடாது.

சொந்தமாக ஒரு தொழிலைச் செய்வதற்கு ஊக்கம், மனோதைரியம், சொந்த வாழ்க்கையில் தியாகம் முதலிய

குணாதிசயங்களும், முதலீடு செய்யும் துணிவு, தொழிலறிவு, தொழில் தேர்ச்சி முதலிய பண்பாடுகளும் அத்தியாவசியம், இத்துடன் கட்டிக்காக்கும் பொறுப்பும், சுமையும் அதிகம், வரிச்சுமையையும் தாங்கவேண்டும். பொதுவாழ்விலும் ஈடுபடுதல் அதற்கான சிறிய நன்கொடைகள் போன்ற பணச்செலவுகள் செய்தல் ஏற்படலாம். தொழிலாளர்கள் அரசினர் கட்டுத்திட்டங்கள் இவைகளால் உண்டாக்கப்படும் முட்டுக்கட்டைகள் முதலியவற்றைத் தாண்டவேண்டிய சந்தர்ப்பங்களும் உண்டாகலாம். இதெல்லாவற்றிலும் மேலாக நீங்கள் செய்யும் தொழிலால் கிடைக்கக்கூடிய லாபம் நீங்கள் ஒருவேலைக்குச் சென்று சம்பாதிக்கக்கூடிய சம்பாத்யத்தைவிடக் கம்மியாகவும் இருக்கலாம். இவ்வளவு கஷ்டங்களையும், தொல்லைகளையும் ஏற்று தொழில் செய்வதால் கிடைக்கும் வெகுமானம்தான் என்ன?

வாழ்க்கையில் சுதந்திரம் இழந்து பிறர்கட்டளைகளுக்கு உட்படுதல், சாமர்த்தியமிருந்தும் வன்மையிருந்தும்அவைகளைக் காரியாம்சத்தில்கொண்டுவந்து பிரயோஜனப்படுத்திக் கொள்ளாத நிலை, பிறரிடம் வேலைக்கெனகையேந்தி நிற்கும் செயல், இவைகளிலிருந்து விடுதலையடைந்து தனக்குச்சுதந்திரத்தைச் செய்து வாழ்க்கையை நடத்தக் கிடைக்கும் வாய்ப்பே ஒரு பெரிய லாபமும் ஈடிலா சன்மானமுமாகும்.

மேலும், உங்களை ஒருவரும் வேலையிலிருந்து ஒருமுகமாகத் தீர்ப்புக்கூறித்தள்ள முடியாது. நியாயத்திற்கும் ஒழுங்கிற்கும் ஆபத்துக் காலத்தில் விபரீத பலனளிக்கும் கட்டுத்திட்டங்களுக்கு உட்படவேண்டியதில்லை.

மனச்சாட்சிக்கு விரோதமான செய்கைகளில் வெறுப் பிருந்தும் நிர்பந்தத்திஞல் ஈடுபட வேண்டிய தேவை யில்லே. உங்கள் சாமர்த்தியங்களே சரிவர பயன்படுத் திக்கொள்ளும் வாய்ப்புக்களால் ஏற்படும் நன்மைகள் லாபங்கள் பூராவையும் நீங்களே அடையலாம்.

எல்லாவற்றிற்கும் பிரதானமாக உங்கள்தொழில் பெருகும் பொழுது நீங்களும் சுகவாழ்வு வாழ்ந்து உங்களேச்சார்ந்த மற்றவர்களுக்கும் ஜீவஞேபாயத்திற்கு வேலேகளேக்கொடுக்கும் வசதிகளே உண்டாக்கி அதஞல் நீங்கள் அவர்களுக்கு சகாயமும் பெருமையும் அளிக்கின் றீர்கள். இதற்கு எந்த விதத் தியாகமும் ஈடாகாது.

பள்ளிக்கூட வாழ்க்கையில் அதிபுத்திசாலிகளாக வும், கெட்டிக்காரர்களாகவும், சாமர்த்திய முள்ளவர் களாகவும் இருந்த பலர் ஒரு வேலேக்குச்சென்ற சில ஆண்டுகளில் ஜீவனற்று செக்கு மாடுகள் போல ஒரே பாதையில் சுற்றிச்சுற்றி உழலுவது போன்ற நிலேயில் இருப்பதை நாம் பார்க்கிறேம். வெளியில் இருந்து பார்க் கையில் நம்பிக்கைப் பூங்காவனமாகத் தோன்றிய பல வேலேகள் உட்சென்று பார்க்கையில் வறண்ட பாலே வனங்களாக இருப்பது கண்கூடு. மலர் தூவியபாதை என்று எண்ணிக்கொண்டு புகுந்த வேலே முட்கள் நிறைந்த வழியாக இருப்பது அனுபவத்தில் காணும் பலன்.

தனக்காகச் செய்யும் தொழில்களில் சிறு ஆபத்துக் களும் துணிச்சலுமுள்ள சந்தர்ப்பங்களும் உண்டாகலாம் அதே சமயத்தில் இதற்கு பிரதிப்பிரயோஜனமாக வேலே

யில் அமர்த்திக்கொள்ளும் ஒரு எஜமானருக்குக் கிடைக்கக்கூடிய நல்ல சந்தர்ப்பங்களும், லாபமும் கிடைக்கிறது. பயிற்சியுடனும், சாமர்த்தியத்துடனும், விடா முயற்சியுடனும், நிதானத்துடனும், நடத்தப்படும் எந்தத் தொழிலும் நல்ல வருமானத்தைக் கொடுக்கத் தவறியதே இல்லை. வெற்றியுடன் தொழில் செய்வோர் செயல்களைக் கூர்ந்து கவனிப்பின் இது தெளிவாகும்.

தனக்காகத் தொழில் செய்யும் ஒவ்வொருவரும் அதிகப்பிரயாசையுடன் பாடுபடுவது இயற்கை. இதனுல் அவருக்கு கெட்டிக்காரத்தனம், முயற்சி, முன்னேக்கு அயராது பாடுபடும் தன்மை, முதலிய நற்குணங்கள் பெருகுகின்றன. பிறருக்காக வேலை செய்யும் ஒருவர் கடுமையாகப்பாடுபடுவது அநேகமாக மதிக்கப்படாமல் போகலாம். அதிக நேரம் வேலை செய்தாலும் போற்றப்படாமல் போகலாம். ஏன்! அது அரசாங்கத்தில் சட்ட விரோதமாகவும் கருதப்படலாம். எவ்வளவு உண்மையாக, சாமர்த்தியமாக, பிறருக்காக பாடுபடினும் அதிலும் குற்றங்கள் கண்டுபிடித்து மட்டம் தட்ட சிலர் தவறுவதில்லை. நிஜ உழைப்பு சில சமயங்களில் உங்களை சந்தேகிக்கக்கூடிய நிலையையும் உண்டாக்கலாம். ஆனுல் இவைகளெல்லாம் சுயமாகத் தொழில் செய்வோருக்கு என்றும் குறையாத ஒரு மூலதனமாகிறது.

உழைத்து முன்னணிக்கு வரவேண்டும்; அதிகமாகச் சம்பாதிக்கவேண்டும்; இதனுல் நாம் பயனடைவதுடன் பிறருக்கும் வேலைகொடுத்து, சவுகரியங்களையும் தேடிக் கொடுத்து உதவவேண்டும் என்ற மனப்பான்மை ஒவ்

வொரு பிரஜையிடமும் வளரவேண்டியது நம்நாட்டின் தற்கால நிலைமைக்கு மிகவும் அவசியமாகும். இதில் ஈடுபடும் ஒவ்வொருவரும் பயனடைவதுடன் நாட்டிற்குகந்த ஒரு உயரிய சேவையை மறைமுகமாகச் செயலாற்றுகின்றனர். தங்களைத் தாங்களே மேன்மைப்படுத்திக் கொள்கின்றனர்.

வேலையும் சுதந்திரமும்:

ஒரு சுதந்திர நாட்டின் சுதந்திரத்தைப் பேணி வளர்ப்பவன், அதன் பலாபலன்களை உண்மையில் அனுபவிப்பவன் சொந்தமாக தொழில் செய்பவனே. அரசாங்க உத்தியோகமானாலும் சரி அல்லது வேறு எவ்விதமான உத்தியோகமானாலும் சரி, இதனால் கிடைக்கும் ஊதியம் அவனை ஜீவிக்கச்செய்வதால் அவைகளின் கட்டுத்திட்டங்களுக்கு கீழ்ப்படிந்தேதீரவேண்டிய நிர்ப்பந்தம் இருந்தே தீரும். தனக்கு மேலிருப்பவர்கள் போக்குக்கு மாறாகச்செயல்படுவது அனுமதிக்கப்படாததுடன் எண்ணுவது கூட குற்றமாகக்கருதப்படும், இந்தக் கட்டு திட்டங்கள் அவனுடைய சுயவாழ்வில் கூட தலையிடுகிறது என்பது கண்கூடு.

நாடும் தொழிலும்

ஒருநாட்டின் பொருளாதாரம் அதன் தொழில் முயற்சியைப்பொறுத்தே இருக்கிறது. அதன் சம்பத்தும் சுபீட்சமும், பொருளாதாரத்திடமும் அதன் தொழில்களின் வளர்ச்சியைப் பொறுத்தே இருக்கின்றன. உலகத்தின் முன்னணியில் நிற்கும் தேசங்கள் எல்லாவற்றின் பொருளாதாரத் திடத்தை ஆராய்ந்து பார்த்தால் நாடு சிறிதாக இருந்தாலும் சரி, பெரிதாக இருந்தாலும் சரி, ஒவ்வொரு தேசத்தின் சுபீட்சமும் இதன் ஆரம்பமும் தனிமனிதர்கள் சுயமாகஅல்லது பலருடைய கூட்டுறவுடனே தொழில்களை ஆரம்பித்து ஊக்கத்துடன் உழைத்து முன்னணிக்கு வந்தவர்களின் வாழ்க்கையை ஒட்டி இருக்கிறதென்பதை அறியலாம். இன்றைக்கு அவர்களுடைய, அவர்கள் சந்ததிகளுடைய தொழில் மனப்பான்மையே அவர்களும் அவர்கள் தேசங்களும் தலைதூக்கி நிற்கக் காரணம் என்பதும்அந்தநாட்டின் சுபீட்சமும் வேறொன்றி இருக்கும் தொழில் அளவைப் பொறுத்தே இருக்கின்றதென்பதும் புலனாகும்.

ஒவ்வொரு நாட்டிலும் அஸ்திவாரமான தொழில்களையும், தமக்கும் தம்மைச் சேர்ந்தவர்களுக்கும் சுபீட்சத்தை அளிக்கும் ஏனைய சிறிய-பெரிய தொழில்களை ஆரம்பித்து நடத்துபவர்கள் எல்லோரும் தம் நாட்டின் முன்னேற்றத்திற்கும், வருங்காலத்தின் சிறப்பிற்கும் அஸ்திவாரம் நாட்டியவர்களாகின்றார்கள். இம்மாதிரி நாட்டு மக்களின் சுயதொழில் உணர்ச்சியாலும் ஆக்க

வேலைகளிலும் தலைசிறந்து நிற்கும் நாடுகளுக்கு உயரிய உதாரணங்களாக ஸ்வீஸர்லாந்து, ஜப்பான், ஜெர்மனி, அமெரிக்க ஐக்கிய நாடு முதலிய நாடுகளைச் சொல்லலாம். அவரவர்கள் நாட்டின் சக்திகளுக்குத் தகுந்தவாறு தொழில்துறையில் பிரமிக்கத்தக்க சாதனைகள் செய்துள்ளனர்.

அமெரிக்கா நாட்டைப்பற்றியும் அந்நாட்டுமக்களைப் பற்றியும் எவ்வித குற்றங்கள் சொல்லப்பட்ட போதிலும் அதற்கு ஈடான ஐஸ்வரியத்தையும் வசதிகளையும் பெற்றுள்ள நாடு வேறு எதுவும் இல்லை. அமெரிக்க மக்கள் வாழ்க்கைத்தரம் மற்ற எல்லாநாட்டு மக்களுடையதைவிட உயர்ந்தது. உலகிலேயே முதல் ஸ்தானத்திலுள்ளது. இவைகளை அதன் கடும் விரோதிகள் கூட ஒப்புக்கொள்கின்றனர். உணவு சகாயமா ? இந்தா இருபது லக்ஷம் டன் கோதுமை. கப்பல் வசதியா? எங்களுடைய ஒரு தொழிற்சாலையே நித்தம் ஒரு கப்பலைக் கட்டி முடிக்கிறதே! எவ்வளவு வேண்டும்? பண உதவியா? எத்தனை கோடி ரூபாய்? கடனுகவா? கொடையாகவா? எப்படிவேண்டுமானுலும் சரி, எடுத்துக்கொள்! அரசியல் நிபந்தனை ஒன்றும் கூடாதா? அதற்கென்ன, சரி! ஆயுத உதவியா? ஆகா ஆகட்டும் வேண்டியது தருகிறேன் வேறு என்ன வேண்டும்? நிபுணர்கள் உதவியா? தருகிறேன்!. வேறு என்னவேண்டும்? எந்த விதமான உதவியும் எங்களால் அளிக்க முடியும் என்று சொல்லக் கூடிய நாடாக எப்படி ஆயிற்று? இந்நாட்டில் உள்ளது போன்ற இயற்கை வளங்களையும், ஏன்? இதைவிட அதிகமான இயற்கை வளங்களையும் பெற்றுள்ள நாடுகளுக்குக்கூட இல்லாத இவ்வளவு உன்னத நிலை இதற்கு மட்டும் எப்படி உண்டாயிற்று?

இந்தச் சிறந்த நிலைக்கு ஒரே காரணம், அதன் தொழில் வளர்ச்சி தான். சுதந்திர மனப்பான்மையும் முன்னேற்றநோக்கமும் உடைய பலர் பல தொழில்களை காலத்திற்கும், சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப ஆரம்பித்து கடுமையாகப் பாடுபட்டு பலவற்றைப் பல மடங்கு களாகப் பெருக்கி, நாட்டின் வளத்தையும், தேசிய செல் வத்தையும், மக்களின் சௌகரியங்களையும், எல்லாவித வசதிகளையும் அதிகப்படுத்தியதுதான். இம்மாதிரியாக அதிகப்படுத்தப்பட்ட வளங்களும் சௌகரியங்களும் இப்பொழுது எந்தத்துறையிலும் திருப்ப ஏதுவாக்கப் பட்டு எல்லாத்துறைகளிலும் பிரமாண்டமாக உயர்ந்து முன்னணியில் நிற்கின்றன.

வாழ்க்கைத்துறையில் முன்னேற்றமும், அதற்கான வழிகளும், சௌகரியங்களும் நிறைதலே நாட்டின் சுபீட் சத்திற்கு மார்க்கம் என்று அந்நாட்டார் உணர்ந்திருக் கின்றனர். மக்களிடம் தொழில் மனப்பான்மை, சுதந்திர உணர்ச்சி, பிறரையும், அரசாங்கத்தையும் தங்கள் சௌ கரியங்களுக்கும் தங்கள் வாழ்க்கை வசதிகளுக்கும் எதிர் பாராமல் தங்களுக்கு வேண்டியவற்றைத் தாங்களே செய்து கொள்ளும் போக்கு, ஆக்கவேலையில் ஈடுபடும் தன்மை, இத்யாதி உணர்ச்சிகள் அன்று அமெரிக்கருக்கு இல்லாதிருந்தால் அந்நாடு இன்று இவ்வுன்னத நிலையில் இருக்கவே முடியாது,

எவ்வளவுக் கெவ்வளவு தொழில்கள் அதிகரிக்கின் றனவோ, அவ்வளவுக்கவ்வளவு சுபீட்சமும் அதிகரிக் கிறது. நாட்டின் தேசியச் செல்வமும் பெருகுகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிகிறது. சமீபத்தில்

வெளியாகி, நம்நாட்டுச்சபையால் நிறைவேற்றப் பட்டுள்ள ஐந்தாண்டுத் திட்டத்தைப் பார்ப்போம். இதில் முக்கிய அம்சம் தொழில்துறையை விஸ்தரிப்பது தான் என்பதை எல்லோரும் அறிவோம். இதில் அதிக கவனத்திற்குரியது உடனடியாக நாட்டின் நலனை உத்தேசித்து மக்கள் செய்ய வேண்டியது, செய்யக்கூடியது, சிறுதொழில்களின் அபிவிருத்தி. இதன் பொறுப்பு அரசினரால் மக்களுக்கு விடப்பட்டு அவர்கள் இதை நிறைவேற்ற வேண்டுமென எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கு ஆவன செய்து நாட்டைப் பலப்படுத்த வேண்டியது மக்கள் பொறுப்பு.

தொழில் செய்யும் ஒவ்வொருவரும் தம் நாட்டின் பொருளாதாரத்தை வளர்ப்பவராவர், நாட்டின் சுபீட்சத்தை வளர்ப்பதில் தம்முடைய பங்கை செய்தவராவர். எனவே தொழில் முயற்சி தான் தேச சேவை. ஒரு தேசத்தின் சுபீட்சம் அதன் தொழில்களுடன் வளருகிறது என்பது அடிப்படையான ராஜீய தத்துவம்.

சற்று ஒரு முறை சிந்தித்துப் பாருங்கள். நம் நாடு, நமதுஊர்கள், நமது கிராமங்கள் இருக்கும் நிலையை. இவைகளை எவ்வளவு சீர்திருத்த வேண்டியிருக்கின்றன. நம் மக்களுக்கு எவ்வளவு வசதிகளும் முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகளும் தேவையாக உள்ளன! இவர்கள் எவ்வளவு காரியங்களுக்கு வெளியிடங்களையும் பிறரையும் நம்பவேண்டியிருக்கிறது. எவ்வளவு பற்றுக்குறையிலும், வசதிக்குறைவிலும் உள்ளார்கள். இவைகளையெல்லாம் சரிசெய்ய எவ்வளவு பேர்கள் தொழிலில் இறங்கினாலும் போதுமா? என்ற நிலையிலே அல்லவா இருக்கின்றன. இவைகளைத் தீர்க்க தொழிலில் இறங்கு

பவர்கள் குறிப்பாகத் தங்களுக்கு லாபத்தையும் தன்னைத்தானே மேன்மைப்படுத்திக் கொள்ளசந்தர்ப்பத்தையும் ஏற்படுத்திக் கொள்ளுவதுடன், பொதுவாக லக்ஷக்கணக்கான மக்களுக்கு வசதிகளைத்தேடிக் கொடுத்தவர்களாகிருர்கள். இதனுல் எண்ணற்றவர்களுக்கு வேலைகளை உண்டாக்கி நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப்போக்க வழி செய்கிருர்கள். நாட்டின் தேசீயசெல்வத்தைப் பெருக்குகின்ருர்கள். நாட்டின் வளத்தையும் பண்பாட்டையும் அதிகப்படுத்துகின்ருர்கள். முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துகின்ருர்கள்.

உண்மையில் நாட்டில் எல்லோரிலும் கம்பீரமும், பெருமையும் அடைய அதிக பாத்திய முடையவன் சுயமாகத் தொழில் செய்பவனே. செய்யும் தொழில் எவ்வளவு சிறியதானுலும், அது ஒரு விதத்தில் வாழ்கைக்கு இன்றியமையாததே. சுயமாக ஒரு தொழிலை ஆரம்பித்துச் செய்வதால், வெற்றி பெரியதோ, சிறியதோ, ஆதாயம் கிடைத்தாலும் கிடைக்கா விட்டாலும் நாட்டின் நிலையை உயர்த்தவும், நாட்டின் சேவையிலும் அவர்கள் தம்பங்கை ஒரு சிறதளவாவது செய்தவர்களாகிருர்கள். இத்துடன் அவர்கள் சுயேச்சையான ஒரு பிழைப்பை, ஜீவனோபாயத்திற்காக, அளவில்லாமல் சம்பாதிக்கக்கூடிய மார்க்கத்தையும், வாழ்க்கை வசதிகளையும், அறிவையும், விசாலப்படுத்திக்கொள்ளும் வாய்ப்பையும், தேடிக்கொள்ளுகின்ருர்கள்.

பராமார்த்திகமாகப் பார்ப்பினும் தொழில் செய்யும் ஒவ்வொருவரும் ஒருவிதத்தில் தரித்திர நாராயண சேவையே செய்கின்ருர். மனிதனுக்குத் தொண்டு செய்வதின் மூலம்தான் நீ கடவுளுக்குத் தொண்டு செய்கிருய்

என்பது ஒரு ஆங்கிலப்பழமொழி. ஒருவர் ஒரு தொழிலை மேற் கொள்ளுவதால் அவரை அண்டிப் பிழைக்க வரும் பலருக்கு அவர்கள் வாழ்க்கை வசதிகளைப்பெற, ஜீவனம் செய்ய, அவரால் வழி ஏற்படுகிறது. இதனால் அவர்கள் வறுமையைப் போக்க, அவரால் மார்க்கமும், சகாயமும் ஏற்படுகிறது. ஆகவே இதை தரித்திர நாராயண சேவை என்று கூறுவதில் தவறு இல்லையல்லவா? தரித்திர நாராயண சேவை கடவுளுக்கு மிகவும் ஏற்றது.

தொழில் செய்வோர்கள் எவரானாலும் முதலாளிகள், முதலாளித்வம் ஒழிய வேண்டும் என்ற ஆர்ப்பாட்டம் காதை செவிடுபடுத்தும் இந்நாடுகளில் தொழில் செய்வதை தரித்திரநாராயண சேவை என்று கூறுவது வியப்பூட்டுவதாய் இருக்கும். வெறும்கொள்கைகளில், வாய்வீச்சுகளில் மனதை சிதரவிடாமல், ஆகாயக்கோட்டைகளைக் கட்டாமல் காரிய சாத்தியமானதையும், அனுபவ சாத்தியமானதையும் சிந்திக்கவேண்டும். கண் முன் நிற்கும் அடிப்படையான பிரச்னைகளை நேருக்கு நேர் சந்தித்து தீர்க்க வழி காணவேண்டும். இவ்வாறு சிந்திக்கையில், வழிகாண ஈடுபடுகையில், சுயமாக தொழில் செய்ய ஈடுபடுவதில் அதனுள் சேவையும் மறைமுகமாக புதைந்து கிடப்பது புலனாகாமற் போகாது. இன்றைய சூழ் நிலையையும், அனுபவ சாத்தியமான வழிகளையும் ஆராய வேண்டும். ஏட்டுச் சுரக்காய் எதற்கும் உதவாது. காலநிலைக்கு ஏற்ப உகந்ததை செய்வதே அறிவுடைமையாகும். தொழில் செய்தால் தொழில் செய்பவருக்கு ஏற்படும் பிரதிபிரயோஜனமே நம் கண்களுக்கு இதன் மேன்மை புலனாகாமல் செய்தாலும் உண்மை நிலை இதுவே.

வேலையும் அரசாங்கமும்

பெரும்பான்மையோருக்குக் காலக்ஷேபத்திற்கு வழி ஒருவேலைசெய்து பிழைப்பதுதான். அதுவும் கிடைக்காமல் அநேகர் அல்லும் பகலும் அல்லல்பட்டு உழல்கின்றனர். வேலை தேடி அலைவதே அவர்கள் வேலை. அரை வயிற்றுச் சோற்றிற்காவது கட்டுப்படியாகும் படியான வேலை ஒன்று அகப்பட்டால் போதும் என்பதே அவர்கள் பிரார்த்தனை. ஓரளவிற்கு வசதியுள்ளவர்களுக்குப் பற்றுக்குறையினாலும், வாழ்க்கை வசதிகளை அதிகரித்துக் கொள்ளுவதினாலும் ஒரு வேலைக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஏற்கனவே வேலைக்குச் சென்று கஷ்ட ஜீவனம் செய்து கொண்டு வருகிறவர்களுக்கு வேலைதேடும் தொல்லை இல்லாவிட்டாலும் வரும்படி போதாமை, சதா இருக்கும் வேலையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய கவலை, உணர்ச்சியற்ற உழைப்பு, உழைப்பிற்கேற்ற—சாமர்த்தியத்திற்கேற்ற ஊதியமில்லாமை இவைகளே முன் நிற்கின்றன.

வேலை கிடைப்பதோ குதிரைக் கொம்பாக இருக்கிறது. அப்படி ஒருவேலை கிடைத்து விட்டாலும் கிடைக்கும் ஊதியம் ஜீவனத்திற்குப் போதவில்லை. இப்படி இருந்தால் எப்படித்தான் வாழ்வது? வாழ்க்கையில் ஒரே கசப்பு, பழி அரசாங்கத்தின் மேல். இதற்கு இந்த அரசாங்கம்தான் காரணம்; இதற்கு என்னபரிகாரம்? அரசாங்கம்தான் பரிகாரம் கண்டுபிடிக்க வேண்டும், பரிகாரம் தேடிக் கொடுக்க வேண்டும்; இது இந்நாட்களில்

பேசப்படும் சாதாரணப் பேச்சாகிவிட்டது. உண்மையில் இதற்கு அரசாங்கம் தான் காரணமா? அரசாங்கத்திஞல் தான் பரிகாரம் தேடிக்கொடுக்க முடியுமா? அதஞல் தனி மனிதனின் சுதந்திரத்தையும், சுபீட்சத்தையும் பாதிக்காத வழியில் ஏதாவது செய்ய முடியுமா? என்பவைகள் சற்று நிதானித்துச் சிந்தித்து பார்க்க வேண்டிய விஷயங்கள்.

அரசாங்கம் இதற்கு முழுக்காரணம் அல்ல; இந்த நிலையைத்தீர்க்கும் வழிகளுக்கு ஓரளவிற்குத்தான் முயலலாம், உதவிபுரியலாம். இதை விட்டுப் பூரணபரிகாரம் எதுவும் அரசாங்கத்திஞல் தேடிக் கொடுத்து விடமுடியாது. இன்றைய நிலையில் இதையும் ஒரு மிகச்சிறிய அளவிற்கே செய்யமுடியும். ஆஞல் இதன் மிகச்சிறிய பலன்கள்கூட சாமான்ய மனிதனின் கைகளுக்கு எட்டுமா? என்பது சந்தேகமே. இப்பிரச்னைகளைத் தீர்க்க ஓரளவிற்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்கலாம். இவைகளைத் தீர்த்துக் கொள்வது மக்கள் மீதே உள்ளது. இப்படிச் சொல்லுவது அரசாங்கத்திற்குப் பரிந்து பேசுவதல்ல. இதற்குப் போதிய காரணங்கள் இருக்கின்றன. ஆய்ந்து பார்த்தால் இது தெளிவாகும்.

அரசாங்கம் நாம் எதிர்பார்க்கும் தொழில் வளர்ச்சியையும், தொழிலில் ஈடுபடுதலையும் செய்ய வேண்டுமேயாஞல் அதற்குப் போதிய பணம் வேண்டும். தற்காலம் இருக்கும் வரி வருவாய்களைக் கொண்டு அரசாங்கத்தின் முக்கிய கடமைகளான தற்காப்பு, நிர்வாகம் போன்றவைகளைச் சரி செய்வதே கஷ்டமாய் இருக்கிறது. இப்பொழுதுள்ள வரிச்சுமையே மக்களுக்குத் தாளமுடியா

தவையாக இருக்கிறது. சாதாரணமாகத் தனிப்பட்டவர்கள் ஒன்றாகவோ அல்லது சேர்ந்தோ செய்ய முடியாத மிகப்பெரிய தொழில்களை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு நடத்துவதற்கே வருவாய்போதாமல் இருக்கிறது. தேசிய வெளிநாட்டுக்கடன்களும் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. மேலும் தொழில் வளர்ச்சிக்கு அரசாங்கத்தை எதிர் பார்த்தால் அவர்களிடம், பணம் வேண்டுமே! அதற்கு நம் வரிச்சுமையை அதிகரிப்பதைவிட வேறு வழிஎன்ன இருக்கிறது! இதைச் சமூகம் தாங்கமுடியுமா?

அப்படியே வரிச்சுமையை அதிகரித்தோ, கடன்கள் வாங்கியோ பணம் சேகரித்து அரசாங்கம் தொழில்களை மேற்கொண்டு நடத்த முயற்சித்தாலும், அரசாங்கம் தன் அரசாளும் கடமைகளைச் சரிவரச் செய்து அத்துடன் தொழில்களைச் சரிவர நிர்வகிப்பதும், அதனால் நமக்கு நன்மை உண்டாகும் என்று நினைப்பதும் அநுபவ சாத்தியமற்றது. இன்றைய நிலையில் இது முடியாது. வருங்காலத்திலும் இது நிச்சயமாக சாத்தியம் என்றும் சொல்ல முடியாது. இதில் இக்கட்டுகள் நிறைய உள்ளன.

தொழில் ஸ்தாபகம், தொழில் செய்தல், தொழில் முன்னேற்றம் இவைகளெல்லாம் வெறும் சட்டதிட்டங்களினால் செய்துவிட முடியாது. மனிதனுடைய ஆக்க சக்தியை சுயமாகச்சரிவர உபயோகப்படுத்துவதினால் பெருகுமே ஒழிய அதைப்பற்றி சட்டதிட்டங்கள் ஏற்படுத்தி விடுவதால் உண்டாக்கிவிட முடியாது. மனிதப் படைப்பு ஒரே அச்சில் வார்க்கப் பட்டிருக்கவில்லை. மனிதனுள் மனம் என்னும் விசித்திர வஸ்து ஒன்று ஒளிந்து

கொண்டிருக்கிறது. அதுவே அவனை ஆட்டிவைக்கிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதம், அவரவர்கள் விருப்பு வெறுப்புகள் தனித்தனி, மனப்பான்மை, அமைப்பு வெவ்வேறு விதம். ஆகையால் வெறும் சட்ட திட்டங்களினால் தன்னல மற்றதன்மை உண்டாகி, சலியாமல் உழைத்து, கருமமே கண்ணாகி, முன்னேற்றமும் சுபீட்சமும் உண்டாக்கப்பட்டு விடும் என்று நினைப்பது தவறு. இவ்வித நினைவுகளும், கொள்கைகளும் பேச்சளவில் அழகாகத் தோற்றுமே ஒழிய காரியாம்சத்தில் போதுமான பலனை ளிக்காது ஏதாவது சிறிது பலனை அளிப்பதானாலும் அதனால் ஏற்படும் கஷ்டங்கள் பலனைவிட அதிகமாகவே இருக்கும்.

மேலும் அரசாங்கமே வேலை கொடுக்கும் எஜமானராகி, அவர்கள் சொல்லும் வேலையைச் செய்து, அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தைப் பெற்று நம் சுய உணர்ச்சியையும், வளர்ச்சியையும் கட்டுப்படுத்தி நம்மை நாமே மனித இயந்திரங்களாகவும், ஆடுமாடுகள் போன்ற நிலையையும் ஆக்கிக் கொள்ளுதல் மனித வளர்ச்சிக்கே விரோதமானது. நமக்காக நாம் ஏற்படுத்திக் கொள்வதுதான் அரசாங்கமாக இலங்க வேண்டுமே யல்லாமல் அரசாங்கத்திற்காக வாழுவதும், அதன் தயவில் அதன் சௌகரியத்திற்கேற்ப நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுவதும் சுதந்திரமாகாது, ஜனநாயகமும் அல்ல. மனித சமூகத்தையே உணர்வு செயல், அறிவு இவைகளைக்கட்டுப் படுத்தி, சுதந்திரவாழ்க்கையைக் கட்டுப் படுத்தும் இந்நிலை இயற்கைக்கும் விரோதமானது. நம்முடையநாடு இன்றிருக்கும் நிலைக்கும் ஏற்றதல்ல.

நம்மால் ஏற்படுத்தப்பட்டுள்ள அரசாங்கம் அதற்கென இடப்பட்டுள்ள அரசாங்கவேலைகளையும், நம்மால் சாதாரணமாக முடியாத மிகப்பெரிய மூலதனம் காலம், பிரயாசை இவைகள் தேவைப்படும் பெரிய தொழில்களையும். லாபநஷ்டம் பாராமல் மக்கள் சுபீட்சமே குறிக்கோளாகக் கொள்ளக்கூடிய தொழில்களையும் பாதுகாப்பிற்கான ஆயுத உற்பத்தி. அணுசக்தி ஆராய்ச்சி, உற்பத்தி போன்ற தொழில்களையும் நடத்தும் படியாக விட்டு விட்டு நாமே நம் கலாசாரத்திற்கும் நாகரிகத்திற்கும் ஏற்ப தொழில் செய்து கொள்ளுவது தான் உசிதம்.

என்றால் தொழில்செய்ய முடியுமா?

ஒரு நாட்டில், பிரஜைகளின் சொந்தத் தொழில் முயற்சியும், தொழில் வளர்ச்சியும் தான் அதன் மேன்மைக்கானவழி; வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் மார்க்கம்; வேலைக்குச் செல்வதைவிட தொழில் செய்வதே சிறந்தது; அரசாங்கமே எல்லா தொழில்களையும் கொடுக்க முடியாது; கொடுக்கவும் கூடாது என்றால் யார்தான் இந்தத் தொழில்களை ஆரம்பிப்பது? யார் எங்களுக்கு வேலை கொடுப்பது? யார் தொழில் செய்வது? எப்படிச் செய்வது? இல்லாவிட்டால் எனக்கு நானே வேலை கொடுத்துக் கொள்ள ஒரு தொழிலைச் செய்ய முடியுமா? எப்படிமுடியும்?

முடியும், நிச்சயமாக முடியும். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. இந்த "யார்" களில் ஒருவர் இந்தக் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போகும் "நீங்களாக" ஏன் இருக்கக் கூடாது?

பதில்கேள்வி வெகுசுலபமாக இருக்கிறது. அநுபவ சாத்தியமாய் இருந்தால் நலமே. ஆனால் எல்லோராலும் இப்படி செய்ய முடியுமா? எத்தனைபேர்கள் இந்த "நீங்களாக" இருக்க முடியும்? இது காரிய சாத்தியமா? என்பன போன்றவை மேலும் கேள்விகளானால் இதற்கும் ஒருபதில் கேள்வியே விடையளிக்க வேண்டும்.

இப்பொழுது நம்நாட்டில் இருக்கும் சொற்ப சிறிய, பெரிய தொழில்களையும் இதனால் உண்டாக்கப்பட்டிருக்கும் ஜீவனோபாயங்களையும் உண்டாக்கி இருப்பவர்கள்

எல்லோருமே ஆரம்பகாலத்தில் இக்கேள்விகளை தமக்குத்தாமே கேட்டுக்கொண்டு இதனுல் உண்டாகும் அதிர்ச்சியைத் தாளமுடியாமல் வாளாயிருந்திருப்பார்களேயானுல் எப்படி இருந்திருக்கும்?

இன்று உங்களால் சிறிய அளவில் ஆரம்பிக்கப்படும் ஒரு தொழில் செவ்வனே நடத்தப்பட்டால் அது உங்கள் அளவிற்காவது நிச்சயமாக போதுமானதை அளிக்கத் தவருது. போதியமுன்னேக்கும் சாமர்த்தியமும் இருந்தால் அதையே பிரம்மாண்டமாக பெருக்கவும் அதைப் பலருக்குச் சுபீட்சமளிக்கக் கூடிய பல தொழில்களில் ஒன்ருகவும் ஆக்கலாம்.

நம் நாட்டின் ஒரு சிலருக்கே ஒரு தொழில் ஆரம்பிக்க மனேதைரியம், முன்னேக்கு, ஆற்றல் முதலிய சீரிய குணங்கள் இருந்திருக்கிறது. இன்று நாம் சிறிதளவாவது பெருமை கொள்ளும் தொழில்கள் இவர்களது ஆக்க வேலையால்தான் இவர்கள் இதனுல் பிழைத்தும் லக்ஷக்கணக்கான மக்களுக்கும் பிழைக்க வழியும், ஜீவனேபாயத்தையும் ஏற்படுத்தி இருக்கின்றனர்.

இவர்களுக் கெல்லாம் இந்தத் தொழில் அறிவும் செறிகளும் எப்படி வந்தன? எப்படி உண்டாயிற்று? அதுமாதிரி ஏன் உங்களுக்கும் உண்டாகக்கூடாது? உண்டாக்கிக் கொள்ளக்கூடாது? இக்கேள்விகளுக் கெல்லாம் பதில் உங்களிடமே இருக்கிறது. ஆழ்ந்து சிந்தித்தால் இது தெளிவாகத் தெரியவரும்.

தொழில் அறிவுகள், அதற்கான மனப்பான்மை, உற்சாகம் இவைகளெல்லாம் இயற்கையில் ஒருவனுக்குத் தானுகவே உண்டாகவேண்டும். இதுசொல்லிக்கொடுத்து

ஏற்படுவதில்லை. என்று மக்கள் நினைத்த காலம் மலையேறி விட்டது. எதையும் விஞ்ஞான ரீதியிலும் தர்க்க ரீதியிலும் ஆராயும் காலத்தில் நாம் வாழுகிறோம்.

தொழில் திறன், அறிவுக் கூர்மையுடன் கவனித்து கற்றுக்கொள்வோர் எல்லோருக்கும் லகுவில் ஏற்படக் கூடியது. தொழில் செய்யும் முறைகளைக் கற்றுக்கொண்டு ஒவ்வொருவரும் ஒரு தொழிலைச் செய்ய முடியும். இதுவே இன்றைய நிலை.

தொழிற் கல்வி பாடங்களைப் போல போதிக்கப் பட்டும் வருகிறது. தொழிலறிவு பெறமுடியும் என்ற திடமுடிவுடன் செயலில் இறங்கி அதைப்பெற்று அத்து டன் கணிசமான அளவு சிந்தனை சக்தியும், ஊக்கமும் சேருமானால் ஒருவர் ஒரு தொழிலைச் செய்து லாபமடைய முடியும்.

வீண் சந்தேகமும், மனக்குழப்பமும் உங்கள் சக்தி களை நீங்களே அலட்சியப் படுத்தச் செய்யும் உங்கள் விரோதிகளாகும். திடத்துடன் தொழில் அறிவு பெற கங்கணம் கட்டிக்கொண்டு தன்னம்பிக்கையுடனும் பிடிவாதத்துடனும் புறப்படுங்கள். வெற்றி உங்களை எதிர் கொண்டழைக்கும்.

தன்னம்பிக்கை கொண்ட எவரும் எத்துறையிலும் தோல்வியைக் கண்டதில்லை. பிறரால் முடிவது உங்க ளால் ஏன் முடியாது?

விவேகத்துடனும், ஊக்கத்துடனும் முயலுபவர் களுக்கு எதுவும் காரிய சாத்தியமில்லமால் போக முடி

யாது. படிப்படியாக முன்னேற்றம் ஏற்பட்டே தீர வேண்டும். தன்னம்பிக்கை கொள்ளுங்கள். "என்னால் முடியும்" என்ற திட நம்பிக்கை கொள்ளுங்கள். இந்த மனப்பான்மையை வளருங்கள். இதுவே தொழில் துறையிலும், மற்றும் எல்லாத் துறையிலும் நீங்கள் வெற்றியைக் காணச்செய்யும் தேவரகசியம்.

தொழில் அறிவு என்பது பெறமுடியாத எட்டாக் கனியல்ல. வசதிகள் ஏற்படுத்திக்கொள்ளமுடியும். இது தாண்ட முடியாத கடலல்ல. ஊக்கமும் முயற்சியுமே தேவை! ஊக்கமும் முயற்சியும் இருந்தால் தொழிலறிவைப் பெற்று அதன் நற்பயன்களை அநுபவித்து மகிழலாம்.

தொழிலும் விவேகமும்

தொழில் துறையில் இறங்கும் ஒவ்வொருவரும் இது நல்லது, இது கெட்டது, இது செய்யத் தகாதது என்றும், இதன் விளைவுகள் இன்னவை என்றும் புரிந்து கொள்ளும் ஆற்றல் படைத்திருக்க வேண்டியது மிகமிக அவசியமாகும். எந்தச் சிறு காரியமானாலும் விவேகத்துடன் செய்வதே யாவராலும் விரும்பத்தக்கது.

மேலும் தொழில்துறையில் ஈடுபட்டவர்களுக்கு அநேக போட்டிகளும் இடைஞ்சல்களும் ஏற்படுவது இயற்கையான நிகழ்ச்சிகளாகும். அவைகளை யெல்லாம் சமாளித்து நம் காரியத்தை வெற்றிகரமாகச் சாதித்துக் கொள்ளுவதற்கு முக்கியமாய் வேண்டப்படுவது விவேகமே என்பதைச் சொல்லத் தேவையில்லை.

தொழில் துறையில் மட்டுமல்லாமல் வேறு எந்தத் துறையாகத்தான் இருந்தாலும், விவேகமாகவும் முன் எச்சரிக்கையாகவும் நடந்துகொள்ளாவிடில் எதிர்ப்புகளைச் சமாளிக்க இயலாதென்பது கண்கூடு.

"அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்."

என்று புகழப்பெறும் திருக்குறளில் தொழில் துறையில் ஈடுபடுகிற எவரையும் ஊக்கவல்ல நல்லஅறிவுரைகள் அநேகம் காணக்கிடக்கின்றன. உதாரணமாக,

"அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்." (461)

என்னும் குறள் மணியில் ஒளிரும் நற்கருத்தை உணர்ந்து கொண்டு அதற்கேற்ப நடப்போமானால் இடுக்கண் ஏதும் நம்மை அணுகாது என்பதில் சந்தேகமே யில்லை.

தொழிலைச் சூதாட்டமாக நினைத்து அதில் இலாபம் வந்தாலும சரி, நஷ்டம் வந்தாலும் சரி என்று பல பேர் பல தொழில்களில் ஈடுபடுவதைக் காண்கிறோம் முடிவில் சிலர் வெற்றி பெறுகின்றனர். சிலர் தோல்வி யுறுகின்றனர். ஏன் தோல்வியேற்பட வேண்டும்?

ஒருவன் எந்தச் செயலையும் செய்யத் தொடங்கு வதற்கு முன்னமேயே நன்றாக, அதனால் வரும் ஆக்கத் தையும் கேட்டினையும் உணர்ந்து பின்னர்த் தரக்கூடிய ஊதியத்தையும் கருதிச் செய்ய வேண்டும்.

இவ்வாறு ஒருவன் முன்னெச்சரிக்கையான விவே கத்துடன் நடந்து கொள்வானேயானால், இன்னல் ஏன் ஏற்படுகிறது? இதனைத்தான் வள்ளுவர் மேற்கண்ட குறளில் விளக்கிக் காட்டியுள்ளார்.

மற்றும் இன்னொரு குறளில் அவர் கூறுவது மிக மிக அறிய வேண்டிய தொன்றாகும். என்னவெனில், அறிவு உள்ளவர்கள் பின்பு வரக்கூடிய லாபத்தைக் கருதி, தற்பொழுது கையில் உள்ள மூலதனத்தை இழக்கும்படியான காரியங்களில் பிரவேசிக்க மாட்டார்களாம்.

பார்த்தீர்களா ? எவ்வளவு நயமான நல்லுரையை ஆசிரியர் வள்ளுவர், வழங்குகின்றார் நமக்கு!

“ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.” (463)

இதுதான் அக் குறள் மணி.

எனவே தொழில் புரிய விரும்புவோர் விவேகத் தராசில் லாப நஷ்டத்தை நிறுத்துப்பார்த்தே அத்துறையில் ஈடுபடவேண்டும் என்பதை முக்கியமாக அறிய வேண்டும்.

தொழிலும் ஊக்கமும்

முன்னெச்சரிக்கையாக நன்றாய் யோசனை செய்து நிறைய லாபம் தரக்கூடிய ஒரு தொழிலை மேற்கொண்டு விட்டால் மட்டும் போதுமா? அத்தொழில் வளர்ச்சி பெற்று நல்ல பலன்களைக் கொடுக்கவேண்டுமே. இதற்கென்ன செய்வது? இப்படிக் கலங்குபவர்களுக்குத் தானோ என்னவோ ஊக்கமுடைமை என ஓர் அதிகாரத்தையும் திருவள்ளுவர் இயற்றியுள்ளார்.

வாழ்க்கையில் ஒருவனுக்கு மேன்மையும் தாழ்வும் நிகழ்வது அவனவன் ஊக்கத்தின் அளவேயாகும். நல்ல செல்வம் படைத்த ஒருவன் இருக்கின்றான் என வைத்துக் கொள்வோம். மற்றும் அவனிடம் போதிய விவேகமும் சேர்ந்துள்ள தென்று கொள்வோம். இப்படிப் பட்டவன் ஒரு தொழிலை ஆரம்பித்து அதை ஊக்கத்துடன் நடத்தாமல் கவலையற்ற தன்மையாய் இருப்பானேயானால் நாளடைவில் அவனது செல்வம் குன்றுவதுடன், அவனது அறிவு இருந்தும் இல்லாத நிலையே ஏற்பட்டுவிடும் அல்லவா?

இந்த அரிய உண்மையினை வள்ளுவர் பெருமான், நீரில் வளரும் மலர்களை உவமைகாட்டி உரைக்கின்றார்.

"வெள்ளத் தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு."

நீரில் வளர்கின்ற பூக்களுடைய தாளின் அளவு, அவை உள்ள இடத்திலிருக்கும் தண்ணீரின் அளவேயாகும்.

அதுபோல, மக்களின் மன ஊக்கத்தின் அளவே அவர்களின் வாழ்வு உயர்ந்திருக்கும் என்பதே இக் குறளின் கருத்தாகும்.

இவ்வாறு ஊக்கம் உள்ளவர்களாலேயே உலக வாழ்க்கை இயங்குகிறது என்று சொன்னாலும் அது மிகையல்ல. இன்னுமொரு குறளைப் பார்ப்போம்:

"உடையர் எனப்படுவ தூக்கம் அஃ தில்லார்
உடைய துடையரோ மற்று."

வாழ்க்கையில் ஒருவர் பெற்றிருக்கிறார் என்று சொல்லக் கூடிய சிறப்பிற்கு உரியது ஊக்கமே; ஊக்கம் அற்றவர் வேறு எதனைப் பெற்றிருப்பினும், அதனைப் பெற்ற பெருமை உடையவராக ஆவாரோ? என்று கூறிவிட்டு மேலும் கூறுகின்றார்:

"உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்." (592)

என்று ஊக்கம் எனப்படும் உடைமையே ஒருவர்க்கு அழியாத உடைமையாக விளங்குகின்றது. அஃதல்லாத மற்றப் பொருள்உடைமைகள் எப்பொழுதும் தங்கி நிற்கும் படியான சிறப்பைப் பெறாமல் நீங்கிப்போகும் படியான தன்மையுடையவை என்பது இக் குறளில் பொதிந்துள்ள உண்மையாகும்.

உலகில் ஆக்கத்தை விரும்பாதவர் யாரும் இல்லை. ஆனால் விரும்புபவர் எல்லோரும் அதற்கான ஒரு முக்கிய

விஷயத்தை மறந்துவிட்டு என்னென்ன மாதிரிகளிலோ முயன்று அல்லல் படுகின்றனர்.

இவ்வாறு அல்லல் படுபவர்கள் – அதாவது ஆக்கத்தை விரும்பக்கூடியவர்கள் திருவள்ளுவர் கூறிய நல்லுரையை எப்பொழுதும் நெஞ்சில் இருத்திக் கொள்ளவேண்டும். அம்மாதிரி, இருந்தால் ஆக்கம் என்பது அவர்கள் இருக்கும் இடத்திற்குத் தானுகவே வழி கேட்டுக் கொண்டு போய்ச் சேருமாம்.

எவ்வளவோ பாடுபட்டுப் பெறக்கூடிய ஆக்கம் ஒருவரைத் தேடிக்கொண்டு வருவதாவது! இது ஆச்சரியமாக அல்லவா இருக்கிறது? என்பீர்கள். உண்மை தான். எப்பொழுதும் மாறுபாடு அடையாத—சோர்வு கொள்ளாத ஊக்கம் உடையவனுக மட்டும் ஒருவன் இருந்து விட்டால் அவனிடத்திற்குத் தானே ஆக்கம் போய்ச் சேரும். இதோ குறளையே பாருங்கள்:

“ஆக்கம் அதர்விஞய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையான் உழை.” (594)

இதுவரை திருவள்ளுவர் **ஊக்கமுடைமை** என்னும் அதிகாரத்தில் கூறியபடி ஊக்கத்தின் உயர்வை ஒருவாறு உணர்ந்துகொண்டோம்.

ஆனுல், ஆக்கம் பெறுவதற்கு மட்டுமே ஊக்கம் வேண்டும் என்று கருதுதல் கூடாது. அங்ஙனம் கருதினுல் அது மிகமிகத் தவறுனதாகும். ஏனெனில், ஒருவன்

ஆக்கம் பெறுவதற்கு மட்டுமேயல்லாமல் ஒளி (அதாவது பெருமை) பெறுவதற்கும் ஊக்கமே உறுதுணையாக வேண்டப்படுகிறது. அத்தகைய ஊக்கமில்லாமல் வாழலாம் என ஒருவன் எண்ணுவது அவனுக்கு இழிவைத் தருமாம்.

இக் கருத்தினை வள்ளுவரே **பெருமை** என்னும் பிறிதோர் அதிகாரத்தில் உள்ள,

"ஒளிஒருவற் (கு)உள்ள வெறுக்கை இளிஒருவற்(கு)
அஃ திறந்து வாழ்தும் எனல்." (971)

என்ற முதற்குறளின் மூலம் மொழிகின்றார்.

மானிட இனத்திற்கு வேண்டப்படும் பண்புகளில் மிகச் சிறந்ததான **ஊக்கம்** இல்லை என்றால், ஆக்கம் இல்லாமலும் முன்னேற்றம் இல்லாமலும் மக்கள் வாழ்வு பயனற்றதாக ஆகிவிடும்.